திரு. பா. பரணிகுமார்: சான்றுதான் இப்போது நான் சொல்கிறேன். சட்டமன்றம் நடைபெறும்போது அது பற்றி தினமணி ஏட்டிலே ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் இப்போது தங்களுக்குப் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதெல்லாம் என்னிடம் காட்டாமல் இப்படிப் படிக்கக் கூடாது. முறைகேடானது. (குறுக்கீடுகள்) இல்லை. இதே மாதிரிதான் நீங்கள் பேச வேண்டுமென்றால் உங்களுக்குப் பேசுவதற்கான நேரம் முடிந்துவிட்டது. அனுமதி மறுக்கப்படுகிறது. உட்காருங்கள். Question Hour திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாமா, வேண்டாமா திரு. துரைமுருகன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், கேள்வி நேரம் திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாமா, வேண்டாமா? (குறுக்கீடுகள்) வைத்துக்கொள்ளலாமா? (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசியது முறைகேடானது. இந்த மாதிரி பேச்சுக்களைப் பேசுவதற்கு இங்கே அனுமதிக்க முடியாது. திரு. பரணிகுமாருடைய பேச்சு நிறைவுபெற்றது. விவாதம் திங்கட்கிழமை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (11–4–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

108. 28-1-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அறிவிக்கை எண். II (2)/ஆர்.யு. எல்/120 (a-3) / 2004–க்கு திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி (C1) துறையின் 15–10–2004 ஆம் நாளிட்ட 161 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.